23.07.2021

பொருள் எண்.1

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.4980/2018/ஜே3,நாள்.11.04.2019 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் கடிதம் ந.க.எண்.4856/2018/அ4 நாள்.23.04.2019–ன்படி திருச்செங்கோடு நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் ஓட்டுநராக பணிபுரியும் திரு.சி.குழந்தைவேல், திரு.அ.முருகேசன், திரு.எஸ்.சுந்தரராஜ் மற்றும் திரு.ந.வாசுதேவன் ஆகிய 4 நபர்கள் 20 ஆண்டுகள் மாசற்ற முறையில் விபத்தில்லாமல் ஓட்டுநர் பணியிடத்தில் பணியாற்றி முடித்ததற்கு ''தங்கபதக்கம்'' வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் உதவிமேலாளர், பூம்புகார், தமிழ்நாடு கைவினை மேம்பாட்டுக் கழகம், சென்னை அவர்களின் கடிதத்தின்படி, தங்கபதக்கம் (4gram 22ct) செய்ய ரூ.1,02,000/– (ரூ.25,500x4) விலைப்புள்ளி வழங்கியுள்ளார். எனவே மேற்கண்ட பணியாளர்களுக்கு ''தங்கபதக்கம்'' வழங்க ஆகும் உத்தேச செலவினை ரூ.1,02,000/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.3553/2019/எச்1)

பொருள் எண்.2

திருச்செங்கோடு நகராட்சி பொதுசுகாதார பிரிவில் பொதுசுகாதாரப்பணிகளுக்கு பயன்படுத்தப்படும் காம்ப்பேக்டர் வாகனம் எண் TN34 AA 9084–ன் முன்புற 8.25–20 அளவுள்ள இரண்டு டயர்கள், இரண்டு டியூப்கள் மற்றும் இரண்டு பிளாப்புகள் அனைத்தும் பழுதடைந்து எந்த நேரத்திலும் டயர்கள் வெடிக்கும் நிலையில் உள்ளது. எனவே மேற்காணும் வாகனத்திற்கு 8.25–20 அளவுள்ள இரண்டு டயர்கள்,டியூப்கள்,பிளாப்புகள் (MRF) ஆகியவற்றை அரசு சார்ந்த M/s.திருச்செங்கோடு வேளாண்மை பொறியியல் பணி கூட்டுறவு மையம் லிமிடெட் SL(SPL) 170 வேலூர்ரோடு திருச்செங்கோடு என்ற நிறுவனம் மூலம் கொள்முதல் செய்யவும் அதற்காக வரப்பெற்ற விலைப்புள்ளி தொகையான ரூ.31,900/–ஐ செலவினம் மேற்கொள்ளவும் இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வாகனம் எண் TN34 AA 9084–ன் முன்புறம் 8.25–20 அளவுள்ள இரண்டு (எம்.ஆர்.எப்) டயர்கள்,டியூப்கள் மற்றும் பிளாப்புகள் கொள்முதல் செய்ய வரப்பெற்ற அரசு சார்ந்த நிறுவனமான M/s.திருச்செங்கோடு வேளாண்மை பொறியியல் பணி கூட்டுறவு மையம் லிமிடெட் SL(SPL) 170, வேலூர்ரோடு திருச்செங்கோடு நிறுவனம் பெறப்பட்ட விலைப்புள்ளி தொகையான ரூ.31,900/–க்குள் செலவினத்தை மேற்கொள்ளவும் பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் விலைப்புள்ளி பெற்று சப்ளை உத்திரவு வழங்கப்பட்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(கோப்பு எண்.4209/2021/எச்1)

பொருள் எண்.3

திருச்செங்கோடு நகராட்சி பொதுசுகாதார பிரிவில் இயங்குகின்ற வாகனம் எண். TN 34 AC 1120–க்கு வருடந்தோறும் இன்சூரன்ஸ் பிரிமியம் செலுத்தப்பட்டு வருகின்றது. கடந்த ஆண்டுக்கு செலுத்தப்பட்ட இன்சூரன்ஸ் பிரிமியத்திற்கான காலக்கெடு எதிர்வரும் 22.07.2021–ந் தேதியுடன் முடிவடைகின்றது. எனவே தொடர்ந்து வாகனத்தை இயக்கப்பட வேண்டியுள்ளதால் இன்சூரன்ஸ் பிரிமியம் தொகையான ரூ.19,709/–ஐ செலுத்தப்பட வேண்டும். ஆகவே இன்சூரன்ஸ் பிரிமியம் தொகையான ரூ.19,709/–ஐ M/s.யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிட், திருச்செங்கோடு கிளை என்ற நிறுவனத்திற்கு செலுத்தவும் இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொது சுகாதார வாகனம் எண். TN 34 AC 1120–க்கு இன்சூரன்ஸ் பிரிமியம் தொகை ரூ.19,709/–ஐ 22.07.2021–ந் தேதிக்குள் செலுத்த வேண்டியுள்ளதால் பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் M/s.யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிட், திருச்செங்கோடு கிளைக்கு தொகை செலுத்தப்பட்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(கோப்பு எண்.3957/2021/எச்2)

பொருள் எண்.4

திருச்செங்கோடு நகராட்சி பொதுசுகாதாரப்பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனம் எண். TN 34 AC 1105–க்கு வருடந்தோறும் இன்சூரன்ஸ் பிரிமியம் செலுத்தப்பட்டு வருகின்றது. சென்ற ஆண்டுக்கு செலுத்தப்பட்ட தொகைக்கான காலக்கெடு எதிர்வரும் 22.07.2021–ந் தேதியுடன் முடிவடைகின்றது. தொடர்ந்து வண்டியினை இயக்கும் பட்சத்தில் இன்சூரன்ஸ் பிரிமியம் தொகையான ரூ.19,709/–ஐ செலுத்துமாறு M/s.யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிட், திருச்செங்கோடு கிளை மூலம் வரப்பெறப்பட்டுள்ளது. எனவே பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி இன்சூரன்ஸ் பிரிமியம் தொகையான ரூ.19,709/–ஐ செலுத்தவும், இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொது சுகாதார வாகனம் எண். TN 34 AC 1105–க்கு இன்சூரன்ஸ் பிரிமியம் தொகை ரூ.19,709/–ஐ பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று M/s.யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிட், திருச்செங்கோடு கிளை நிறுவனத்திற்கு தொகை வழங்கப்பட்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

(கோப்பு எண்.3961/2021/எச்2)

பொருள் எண்.5

திருச்செங்கோடு நகராட்சி பொறியியல் பிரிவில் குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு உபயோகப்படுத்தப்படும் வாகனம் எண் TN28 W 5257–க்கு கடந்த மூன்று வருடங்களுக்கு எக்ஸைடு பேட்டரி ஒன்று கொள்முதல் செய்யப்பட்டு பொருத்தப்பட்டு இயக்கப்பட்டு வந்தது. தற்போது பேட்டரியின் முழு தன்மையும் இழந்துவிட்டதால் ஒவ்வொரு நாளும் வாகனத்தை தள்ளி தள்ளி இயக்கப்பட்டு வருகின்றது. எனவே புதிய 12V 100AMP எக்ஸைடு பேட்டரி ஒன்று கொள்முதல் செய்ய அரசு சார்ந்த நிறுவானமான திருச்செங்கோடு வேளாண்மை பொறியியல் பணி கூட்டுறவு மையம் லிமிடெட் SL (SPL) 170,80 வேலூர் மெயின்ரோடு திருச்செங்கோடு என்ற நிறுவனம் ஒரு பேட்டரியின் விலை ரூ.10,800/– ஆகும் எனவும் பழைய பேட்டரியினை ரூ.650/–க்கு எடுத்து கொள்வதாகவும், மீதம் ரூ.10150/– சப்ளை செய்வதாகவும் விலைப்பட்டியல் கொடுத்துள்ளது. எனவே புதிய பேட்டரி ரூ.10150/–க்குள் கொள்முதல் செய்யவும் இச்செலவினத்தை நகராட்சியின் வருவாயிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வாகனம் எண் TN28 W 5257–ல் குடிநீர் விநியோகம் செய்யும் லாரிக்கு 12V 100AMP எக்ஸைடு எக்ஸ்பிரஸ் பேட்டரி ஒன்று ரூ.10150/–க்கு திருச்செங்கோடு வேளாண்மை பொறியியல் பணி கூட்டுறவு மையம் லிமிடெட் SL (SPL) 170 வேலூர்ரோடு திருச்செங்கோடு என்ற அரசு சார்ந்த நிறுவனத்திடம் பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் சப்ளை உத்திரவு வழங்கப்பட்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(கோப்பு எண்.2141/2020/எச்2)

பொருள் எண்.6

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.24817/ஜே3/2020, நாள்.13.07.2020–இன்படி, திருச்செங்கோடு நகராட்சியில் குடிநீர் பிரிவில் ஒட்டுநராக பணிபுரியும் திரு.T.L.சுப்ரமணி மற்றும் R.மோகன்ராஜ் ஆகியோர் 20 ஆண்டுகள் மாசற்ற முறையில் ஒட்டுநர் பணியிடத்தில் பணியாற்றி முடித்தவர்க்கு “தங்க பதக்கம்” வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் உதவி மேலாளர், பூம்புகார் தமிழ்நாடு கைவினை மேம்பாட்டுக் கழகம், சென்னை அவர்களின் கடிதத்தின்படி, தங்கப்பதக்கம் (4 grams 22ct) செய்ய ரூ.51,000/– விலைப்புள்ளி வழங்கியுள்ளார். எனவே மேற்கண்ட பணியாளர்களுக்கு “தங்க பதக்கம்” வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.51,000/– க்கு மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் பிரிவில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.2683/2021/இ1)

பொருள் எண்.7

திருச்செங்கோடு நகராட்சி பொது சுகாதார பணிகளுக்கு பயன்படுத்தப்படும் கீழ்கண்ட வாகனங்களுக்கு 2021–ம் ஆண்டிற்கு செலுத்தப்பட்ட இன்சூரன்ஸ் பிரிமியத்திற்கான காலக்கெடு 22.07.2021 முடிவடைகின்றது எனவும் தொடர்ந்து வண்டியினை இயக்க கீழ்கண்ட வாகனங்களுக்குரிய தொகையினை செலுத்த வேண்டி M/s.யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிட், திருச்செங்கோடு கிளை மூலம் பட்டியல் வரப்பெறப்பட்டுள்ளது. அவற்றின் விவரம் கீழ்கண்டுள்ளவாறு.

| வ.எண் | வாகன எண்கள் | பிரிமியத் தொகை |
|---|---|---|
| 1. | TN34 AC 1183 | ரூ.19,709/– |
| 2. | TN34 AC 1167 | ரூ.19,709/– |
| 3. | TN34 R 1275 | ரூ.4,978/– |
| 4. | TN34 R 1365 | ரூ.5,257/– |
| 5. | TN34 AC 1165 | ரூ.19,709/– |
| 6. | TN34 AC 1162 | ரூ.19,709/– |
| 7. | TN34 V 5378 | ரூ.19,293/– |
| | மொத்தம் | ரூ.1,08,364/– |

மேலே கண்ட 7 எண்ணிக்கை வாகனங்களுக்குரிய இன்சூரன்ஸ் பிரிமியத் தொகையான ரூ.1,08,364/–ஐ M/s.யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் லிட், திருச்செங்கோடு கிளைக்கு செலுத்தவும் மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொது சுகாதார 7 எண்ணிக்கை வாகனங்களுக்கான இன்சூரன்ஸ் பிரிமிய மொத்த தொகையான ரூ.1,08,364/–ஐ M/s. யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிட், திருச்செங்கோடு கிளைக்கு பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று, தொகை செலுத்தப்பட்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(கோப்பு எண்.3954/2021/எச்2)

பொருள் எண்.8

திருச்செங்கோடு நகராட்சியில் Sri Sai Agencies, Tiruchengode நிறுவனத்தை 5–ஆம் நிலை ஒப்பந்ததாரராக பதிவு செய்திட மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.4369/2021/இ1)

பொருள் எண்.9

திருச்செங்கோடு நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள குடிநீர் லாரி மற்றும் ஈப்பு போன்ற வாகனங்களுக்கு இன்சூரன்ஸ் பிரிமியம் செலுத்தப்பட்ட காலக்கெடு 22.07.2021—ந் தேதியுடன் முடிவடைகின்றது. எனவே தொடர்ந்து வாகனங்களை இயக்க வேண்டியுள்ளதை தொடர்ந்து கீழ்கண்ட வாகனங்களுக்கு உரிய தொகையினை செலுத்த வேண்டியுள்ளது.

| வ.எண் | வாகன எண்கள் | பிரிமியம் தொகை |
|---|---|---|
| 1. | TN28 W 5257(குடிநீர் லாரி) | ரூ.37,546/— |
| 2. | TN28 W 3234 | ரூ.9,370/— |
| | மொத்தம் | ரூ.46,916/— |

மேற்காணும் தொகையான ரூ.46,916/—ஐ M/s.யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிட், திருச்செங்கோடு கிளை நிறுவனத்திற்கு தொகையினை செலுத்தவும், இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

## அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொறியியல் பிரிவு வாகனங்களுக்கான இன்சூரன்ஸ் பிரிமியம் தொகையான ரூ.46,916/—ஐ பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று M/s.யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிட், திருச்செங்கோடு கிளைக்கு தொகை செலுத்தப்பட்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(கோப்பு எண்.3956/2021/எச்2)

பொருள் எண்.10

திருச்செங்கோடு நகராட்சியில் “Sri Jaya Bajaji Builders, Erode” நிறுவனத்தை முதல் வகுப்பு ஒப்பந்ததாரராக (ஏற்கனவே பொதுப்பணித்துறையில் முதல் வகுப்பில் உள்ளதால்) பதிவு செய்ய மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.4368/2021/இ1)

**பொருள் எண்.11**

திருச்செங்கோடு நகராட்சியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உள்ள மொத்த **5134** தெருவிளக்குகளை பராமரிக்க தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்:13899/2016/DO1, நாள்.**18.07.2019**–இல் ரூ.**57.50** இலட்சம் ஒரு வருடம் அனுமதி பெறப்பட்டு, **16.08.2019** அன்று திரு.S.யுவராஜ், ஒப்பந்ததாரர்க்கு மூன்று ஆண்டுகளுக்கு பணி உத்தரவு வழுங்கப்பட்டு (ஒரு ஆண்டுக்கு பிறகு புதுபிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன்) **19.08.2019** முதல் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் இந்நகர்மன்ற தீர்மானம் எண்.**226**, நாள்.**01.06.2020**–இல் பழைய ஒப்பந்த விலைக்கே **19.08.2020** முதல் மேலும் இரண்டு ஆண்டுகள் நீட்டித்து பணி உத்தரவு வழங்க அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்:15797/2020/DO1, நாள்.**24.09.2020**–இன்படி, மேற்கண்ட பணிக்கு **18.08.2020** முதல் **17.08.2021** வரை ஒரு வருட காலத்திற்கு புதுப்பித்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் அடுத்த ஒரு வருடத்திற்கு புதுப்பித்து செய்து அனுமதி வழங்கக்கோரி தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களுக்கு பிரேரனைகள் அனுப்ப மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சியில் உள்ள அனைத்து தெருவிளக்குகளையும் (மொத்தம் 5134) 18.08.2021 முதல் 17.08.2022 வரை மேலும் ஒரு வருட காலத்திற்கு பழைய ஒப்பந்தப்புள்ளி விலைக்கே பணி நீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

<u>(கோப்பு எண்.4368/2021/இ1)</u>

**பொருள் எண்.12**

திருச்செங்கோடு நகராட்சியில் பொறியியல் பிரிவு (குடிநீர் பிரிவு) ஒட்டுநராக பணிபுரியும் திரு.மா.மணிகண்டன், என்பவர் குடும்ப சூழ்நிலைக் காரணமாக நாமக்கல் நகராட்சிக்கு பணிமாறுதல் செய்ய கோரியதன்படி, பணி மாறுதல் செய்யக்கோரி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களுக்கு பரிந்துரைச் செய்ய மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.

<u>(கோப்பு எண்.9015/2020/இ1)</u>